வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

ஆத்மஞான ரத்தினம்

ஜட நாகரீகத்திலே நிர்த்தனம் செய்துகொண்டிருந்த மேனாட்டாருக்கும், அம் மேனாட்டாருடைய மினுமினுப்பு மாயையிலே விழுந்து தங்களுடைய ஆர்ய தர்மங்களை மறந்து அனாசாரங்களிலே மூழ்க ஆரம்பித்த இப் பாதகண்டத்தவர்க்கும் அநாதி வேத உபதேசங்களையெல்லாம் அழுக்கற எடுத்துப் போதித்த அவதாரபுருஷராகிய ஸ்ரீவிவேகாநந்த ஸ்வாமிகளுடைய பேச்சுக்களும் எழுத்துக்களுமாகிய விலைமதிப்பிட முடியாத சுரங்கத்திலிருந்து முக்கியமான விஷயங்களையெல்லாம் ஆங்காங்கு ஒருங்கே திரட்டியெடுத்து, ஸ்ரீ ஸ்வாமிகளின் கருத்திற்கு ஒரு சிறிதும் மாறுபாடில்லாமல் "ஆத்மஞான இரத்தினம்" என்னும் நூல் உலகுக்கு அளிக்கப்படுகின்றது. இந்நூல் இதுகாறும் தமிழ் நாட்டில் வெளிவந்ததில்லை. தமிழ் நாட்டினர் செய்த தவப் பயனால் தென் தேசத்தில் தேசிய கர்ச்சனை செய்து சிறைச்சாலையைத் தவச்சாலையாகப் பெற்றுச் சமீபத்தில் விடுதலை பெற்றவரும், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரது விரிவான சரித்திரம், ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம், ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தர் வேதாந்த ரஹஸ்யம், சச்சிதானந்தசிவம், ஞானரத்நம், ஸ்ரீ பகவத்கிதா சங்கிரகம் முதலிய பல நூல்களின் ஆசிரியரும், "ஞானபாநு" என்னும் பத்

திரிகையின் ஆசிரியரும் அதிபருமான உத்தம தேசபக்த சிரோமணி ஸ்ரீஜத் சுப்பிரமணியசிவம் என்கிற ஸ்வதந்திரா நந்தர் அவர்களால் இனிய செந்தமிழ் நடையில் இயற்றப்பட்டது.

ஸ்வாமிகள் இப் பாதகண்டத்தின் உண்மை நிலைமையினை இன்னதென்று மேல்நாடு கீழ்நாடு முழுதும் சென்று கருணையோடு உபதேசித்தருளியதையும், இரவும் பகலும் ஸ்வாமிகள் இப் பரதகண்டம் உந்நத நிலைமையினை அடையும் பொருட்டுப் பாடு பட்டதையும், கொழுந்து விட்டு எரியும் ஸ்வாமிகளின் தேசாபிமானத்தையும் அறியாதார் இந்தியர்களுள் எவருமிரார்.

ஸ்வாமிகளுடைய ஆழ்ந்த ஆராய்ச்சியிலே அவர் அனுபவ பூர்வமாகக் கண்டறிந்த அநேக உண்மைகள் இந்தப் புத்தகத்திலே நிறைந்து கிடக்கின்றன. தோற்றல் மாத்திரமாயிருக்கின்ற இவ்வுலகனைத்திற்கும் ஆத்மாவே அஸ்திவாரமா யிருத்தலால், இவ்வுலகிலே ஆத்மஞானத்தைத் தவிர வேறு ஞானமில்லை யென்பதே சித்தாந்தம். ஆனால், ஆத்மஞானத்துக்கும் உலக அறிவுக்கும் ஒத்துப்போக முடியாத வித்தியாசங்கள் இருக்கின்றனவே என்றால், அந்த வித்தியாசம், ஸ்வாமிகள் சொல்கிற மாதிரி, அறிவிலேயே யுள்ளது? மாதிரியிலல்ல; அஞ்ஞானம் என்பது என்ன? பேதஞானமே அஞ்ஞானமாகும்; ஒன்றை மற்றொன்றாகக் கருதுவதே பேதஞான மாகும். கருத்தினாலே ஞானம் வேறுபட்டதே யன்றி, உண்மையி லில்லை. ஆகையினாலே, ஆத்மஞானமே பேதஞானமாக விளங்குகிறது. உலக அறிவுக்கும் ஆத்மஞானமே காரணமாகும். ஆதலால், ஸ்வாமிகளுடைய கூற்றுக்களிலெ ஆத்மஞானத்தைத் தவிர

வேறொன்றுமே யில்லை. ஆகையினால், அவர் பேசிய தெல்லாம் ஆத்மஞானமே. பலவகைப்பட்ட பார்வையுடைய உலகினர்களுக்கு ஸ்வாமிகளுடைய கூற்றுக்களில் சில பலவிதமாக விளங்கலாம்; அது அவர்களுடைய பார்வையினாலேயே ஒழிய வேறில்லை.

ஸ்வாமிகளின் வசனங்கள் ஆத்மாவினின்னும் ஊறிப் பொங்கித் ததும்பி வெளிவந்தன என்பதை ஸ்வாமிகளின் நூல்களை வாசிப்பவர்களே யுணர்வார்கள். ஸ்வாமிகள் அவதார புருஷராவர். இத்தகைய மஹான்களுடைய மொழிகள் உலகத்திற்கு இன்பத்தைத் தவிர வேறு எதைப் பயக்க முடியும்? ஸ்வாமிகளுடைய ஆங்கிலஉபந்நியாசங்களும், எழுத்துக்களும், கடிதங்களும், அறிவிலும் ஐஸ்வர்யத்திலும் மிகுந்து அரசாட்சியைக் கைக்கொண்டிருக்கும் ஆங்கிலேயே ஜனங்களையும், மற்றுமுள்ள உலகத்தையும் பிரமிக்கச் செய்துவிட்டன வென்றால், அவற்றின் அருமையையும் பெருமையையும் பற்றி யாது உரைப்பது?

ஆதிகாலத்தில், ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகள் எங்ஙனம் பரதகண்டம் முற்றும் யாத்திரை செய்து, உண்மை நிலைமையினை உலகத்தாருக்கு உபதேசித்து உயர்வுறச் செய்தாரோ அதேவிதமாக இக்கலியுகத்தில் மஹான் ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளவர்கள் உலகமுற்றும் யாத்திரைசெய்து ஆத்மஞானத்தைப்பெருக்கி, அதை வெளியாக்கி உய்யும்படி செய்துவிட்டார். அவருடைய நூல்கள் யாவும் ஆங்கிலத்திலே யிருப்பதால் தமிழ் நாட்டினர்க்கு உபயோகமாவான் கருதி ஆங்கிலங்

தெரியாத பாரத புத்திர புத்திரிகள் அநேகர் விரும்பியவண்ணம் ஸ்வாமிகளின் நூல்களைத் தமிழ் மொழியில் வெளியிட முன் வந்துள்ளோம். ஆதலால், இந்த "ஆத்மஞான ரத்தினத்தைத்" தமிழ் நாட்டினர் அனைவரும் ஆவலுடன் அணிந்து கொள்வார்களானால், தமிழ் நாடு சீக்கிரம் ஒளி பெற்று, அழகு வாய்ந்து உன்னத ஸ்திதியை அடையுமென்ற திட நம்பிக்கை கொண்டே நாம் இப் புஸ்தகத்தை வெளியிடுகின்றோம். ஸ்வாமிகளுடைய ஜீவிதபல்லவியாயிருந்த பலம், சத்தி, தன்னம்பிக்கை ஆகிய இக் கொள்கைகளையும், இக் கொள்கைகளுக்கு அஸ்திவாரமான "நான் அவனே, நான் அவனே" என்ற அத்வைத முடிபும் இதில் சிதறிக் கிடக்கக் காணலாம். திண்ணை வேதாந்தம் பேசிச், சோமபேரி மடங்களிலே காலம்கழிக்கும் காலம் போய்விட்டது. வேதாந்தமானது நமது தினசரி யனுபவத்திலே கொண்டுவரவேண்டிய காலம் இது. அதனால்தான் நமது தேசம் மேன்மை யடையும். அதற்கு இந்த "ஆத்மஞானம் ரத்தினம்" அநுகூலமா யிருக்குமாறு இராஜராஜேஸ்வரியாம் மஹா சக்தி கிருபை புரிவாளாக.

தற்காலத்தில் தமிழ்நாட்டின்கணுள்ள ஒவ்வொருவரும் இப் புஸ்தகத்தை வரவழைத்து மேன்மேலும் ஸ்வாமிகளின் நூல்களைத் தமிழில் வெளியாக்குமாறு எமக்கு ஊக்கத்தை ஊட்டுவார்களாக!

இந்நூல் சொற்பப் பிரதிகளே அச்சிடப்பட்டிருப்பதால் வேண்டுவோர் புஸ்தகத்திற்கு முந்திக்கொள்வது நலம்.

உயர்ந்த காலிகோ பயிண்டுடன் விலை ரூபா 2.

ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புஸ்தகசாலை;

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் கடிதங்கள்

(1, 2, பாகங்கள்)

ஸ்ரீ விவேகாநந்த ஸ்வாமிகளின் கடிதங்களே அந்த மஹானுடைய உண்மையான உட்கருத்துக்களையும் லட்சணத்தையும் விளக்குகின்றன. இக் கடிதங்கள் ஸ்வாமிகள் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய அந்நிய தேசங்களில் யாத்திரை செய்தபோது ஆங்காங்கிருந்து அவர் தமது நண்பர்களுக்கு ஆங்கிலத்தில் எழுதியவையாகும். இவை இதுவரை தமிழில் வெளிவந்ததில்லை. ஸ்வாமிகளின் ஹிருதயத்தில் கொதித்துக் கொண்டிருந்த தேசாபிமானம் என்னும் நெருப்புக் கொழுந்து விட்டு எரிவதை இக் கடிதங்களில் காணலாம். அநேக கடிதங்களில் ஸ்வாமிகளே, “எனக்குள் இருக்கும் நெருப்பைத் தீவிரமாகப் பற்றிக்கொள்ளுங்கள்” என்று இந்திய ஜனங்களிடத்தில் கதறுகின்றார். முதற்பாகத்தில் மதராஸ் டைம்ஸ் பத்திரிகையின் பிரதிநிதியொருவர் ஸ்வாமிகளுடன் செய்த அரிய சம்பாஷணைகளும் அடங்கியுள்ளன. இக் கடிதங்கள் ஊக்கம் ஊட்டுகின்றன; உயிரளிக்கின்றன; உற்சாகத்தைக் கிளப்புகின்றன; ஆர்யதர்மம் ஜ்வலிக்கின்றன; பாரத உணர்ச்சி பொங்குகின்றன; இந்திய ரத்தம் துடிக்கின்றன. நமது தாய்நாட்டின் ஜயகோஷம் முழங்குகின்றன. ஸ்வாமி விவேகாநந்தருடைய கொள்கைகளைத் தமிழ் நாட்டில் விரித்துப் பரப்பிவிட வேண்டுமென்பதே நமது முக்கிய நோக்கமாதலால், விலை மிகவும் குறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. தனித்தனி பாகங்கள் படங்களுடன் விலை அணா 8.

நெ. 4/43, நயினியப்ப நாயக்கன் வீதி, பார்க்டவுன், சென்னை.

இந்தியாவின் இணையிலா மஹான் யார்?

எனது குருநாதர்

(ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் அவதார அற்புதம்)

ஸ்ரீ ஸ்வாமி விவேகானந்தர் மேல் நாட்டில் யாத்திரை செய்து அமெரிக்கா நியூயார்க் பட்டணத்தில் வாசஞ் செய் திருந்த போது ஸ்ரீ இராம கிருஷ்ண பரமஹம்ஸரின் அவதார அற்புதத்தை 'My Master' என்று ஆங்கிலத்தில் செய்த அரிய உபந்நியாசமாம். இது தற்சமயம் தமிழில் வெளிவந் துள்ளது. மஹாபண்டித சிரோமணியான மோக்ஷமூல பட்டா சாரிய (Professor Max Muller) ரே ஒரு "உண்மை மகாத் மா" என்ற தலையங்கத்துடன் "19-வது நூற்றாண்டு" என்ற ஆங்கில பத்திரிகையில் விளக்கியுள்ளார். ஸ்ரீ பரமஹம்சரின் குண வைபவங்கள், ஆசாரியார் நிலைமை, மஹான்களின் பெரு மையைப்பற்றிப் பரமஹம்ஸரே கீழ் வருமாறு கூறுகிறார். "உல கத்தாரைப் பார்த்து ஆத்ம வித்தையைக் கைக்கொள்ளுங் கள்!" உண்மைப் பொருளை நீங்கள் பிரத்தியட்சமாகத் தெரிந்து கொள்ளுங்கள்' இதில் சிஷ்யன், குருபக்தி செய்ய வேண்டிய விதங்கள் முதலான அரிய பெரிய விஷயங்களை அறிந்து கொ ள்வதற்கு இதை ஓர் ஞான பொக்கிஷ மென்றே கூறலாம் இது ஒவ்வொரு தமிழ்ச் சகோதரர்களும் வாசிக்க வேண்டிய முதல் நூலாகும்.

விலை அணா 8.

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் வேதாந்த தத்துவம்

☞ வேதாந்த தத்துவமென்றால், இந்நூலில் உபநிஷத்துகளின் இரஹஸ்யங்கள் நன்றாக விளக்கப்பட்டிருக்கின்றன. இது வேதாந்த தத்துவத்தின் உண்மை நிலையை உபதேசிப்பதுடன் இதில் ஆங்கிலேயர்களால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு ஸ்வாமிகள் அளித்த விடைகளும், அமெரிக்கா கலாசாலை மாணவர்கட்கு ஸ்வாமிகள் அளித்த விடைகளும், அடங்கிய சிறந்த தத்துவநூல் இதுகாறும் தமிழில் வெளிவராதது.

படத்துடன் விலை அணா 8.

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் எதிரொலிகள்

☞ நமது பூர்வீக சரித்திரங்களின் இரஹஸ்யங்கள் தற்சமயம்தான் ஆராயப்பட்டு வருகின்றன. இதுகாறும் அநேக கட்டுப்பாடுகளை நம்பியிருந்தோம். ஆதலால், தென்னாட்டையே தனது புஜபல பராக்கிரமத்தால் ஆட்டி அரசர்களெல்லாம் கதறச் செய்த மஹாராஷ்டிர சக்ராதிபத்தியத்தின் ஸ்தாபகராய்ப் போர்வீரதீர சிம்ஹமான சிவாஜி மஹாராஜா அவர்களுடைய மிக மிக உயர்ந்த குணாதிசயங்களையும், ஆத்மஞான இரஹஸ்யங்களையும், இன்னும் பல அற்புத சக்திகளெல்லாவற்றையும் ஆர்ய ஸநாதன தர்மத்தை மேல்நாட்டில் ஸ்தாபித்து உலகமெங்கும் புகழும் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸதேவரின் சிஷ்ய ரத்தினமாக விளங்கிய ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

மிக மிக விளக்கமாகக் கூறியுள்ளாரென்றால், நாம் அதனை விவரிப்பது அநாவசியம் என விடுத்தோம். ஸ்ரீ ஸ்வாமிகளாலேயே சரித்திரத்தின் உண்மைகள் முற்றிலும் இப்பொழுது தெளிவாகி வருகின்றது. அக்பர், ஜிஹாங்கிர், ஹாஜஹான் முதலிய தாராள சிந்தையுடைய மகம்மதிய அரசர்களின் அரசாக்ஷி நீங்கி அவுரங்கசிப்பினுடைய பட்சபாத அரசாக்ஷி ஓங்கவே ஹிந்துஜன சமுகத்திற்கும் முகம்மதிய ஜனசமுகத்திற்கும் சச்சரவு ஏற்பட்டது. அது அக்காலத்துச் சங்கதி. இப்பொழுதோ ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை உலகெங்கும் பரப்பப்பட்டு வருகின்றது. ஆகலால், சரித்திர உண்மைகள் வெளிப்படுமானால் ஹிந்து முகம்மதிய ஒற்றுமைக்கு ஓர் தூண்டுகோல் போலாகும் ஆதலால், ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் அருளிய எதிரொலிகள், தற்சமயம் பாரத புத்திர புத்திரிகட்கு மிகப் பயன் பெற்று அவர்களை அந்தகாரத்தினின்று நீக்கும் வண்ணம் எளிய தமிழ் வசன நடையில் பாரத மாதாவின் புத்திரரும், சிறைச்சாலையைத் தவச்சாலையாகப் பெற்று அவ்விடத்தில் சச்சிதாநந்த சிவம் என்னும் உயர்ந்த வேதாந்த ரஹஸ்யங்களை எளியசம்பாஷணை மூலமாக எழுதி வெளியிட்ட அரியதேசபக்தருமான ஸ்ரீயுத சுப்பிரமணியசிவம் என்ற பூர்வாசிரமம் நாமம் வாய்ந்த ஸவதந்திரானந்தர் இதனை எழுதியுள்ளார். இதன் பெருமையை வாங்கிப் பார்த்து அறிய வேண்டுமேயன்றி விரிவாக எழுதுவதில் பயனில்லை. ஸ்வாமிகள் படத்துடன் அணா 8

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர் அருள்மொழி விலை	ரூ	2	0	0
ஷை யார் கர்மயோகம் விலை	ரூ	1	0	0
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பிரஹ்மானந்த சம்பாஷணை விலை	ரூ	2	4	0

சச்சிதானந்த சிவம்

☞ மஹான் இயேசுகிறிஸ்துவின் பிரதம சிஷ்யராகிய
பீட்டர் என்பவர் "The Beautiful" என்ற க்ஷேத்திரத்தின்
வாயிலிற் செல்லுங் காலத்தில், அங்கு உட்கார்ந்திருந்த இர
ண்டு கால்களு மில்லாத ஒரு பிறவி நொண்டி, அவரைக் கண்டு
பிச்சை கேட்க, அவர், "Silver and gold I have none,
but such as I have give I thee" என்று அவனைக்
கையைப் பிடித்துத் தூக்கிவிட, அவனுக்கு இரண்டு கால்க
ளும் யாவருக்கு மிருப்பதுபோல் வளர அவன் பரம சந்தோஷ
மடைந்து குதித்துக்கொண்டு சென்றான் என்று கிறிஸ்தவ
வேத புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதே மாதிரியாக
அரிய தேச பக்தரும் ஸ்வாமி விவேகாநந்தர் வேதாந்த ரஹஸ்
யம், கிழக்கும் மேற்கும், கடிதங்கள், ஸ்ரீ ராமகிருஷ்ணர் விரிவான
சரித்திரம், ஞானரத்னம், ஸ்ரீ பரமஹம்ஸ ஸ்ரீ ராமகிருஷ்ண விஜ
யம் இவற்றின் நூலாசிரியரும், சிறைச்சாலையைத் தவச்சாலை
யாகப் பெற்றவருமாகிய ஸ்ரீயுத சுப்பிரமணிய சிவம் என்னும்
ஸ்வதந்திரானந்தர் அவர்கள், தாம் சிறைச்சாலையில் இருந்த
காலத்தில், தம்முடைய மனைவியார், தனது கஷ்ட நிவர்த்
திக்கு ஓர் உபாயம் செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்ள,
"Silver and gold have I none, but such as I have
give I thee" என்று கூறி, தமது சற்குரு முகத்தினின்
றும் கேட்டு அறிந்து அநுபவித்த ரஹஸ்யங்களை அவ்வண்
ணமே லோகோபகார சிந்தனையால் பாரத புத்திர புத்திரிகள்
ஒவ்வொருவரும் வாசித்து அநுபவத்தில் கொண்டுவரும் வண்

ணம் இனிய செந்தமிழ் நடையில் குரு சிஷ்ய சம்வாதமாக சச்சிதாநந்த சிவம் என்னும் பெயரிட்டு, இவ்வருமையான வேதாந்த பொக்கிஷத்தைத் தமது மனைவிக்கு எழுதிக்கொடுத்தார். சகல வேதாந்த தத்துவ ரஹஸ்யங்களின் உட்கருத்துக்களையும், ஆண் பெண் இருபாலாரும் மிகு சுலபத்தில் அறிந்து கொள்ளுமாறு விளக்குவிக்கும் புத்தகம் இதனினும் வேறு இல்லையென்றே கூறலாம். இதில், ஸ்ரீயுத சுப்பிரமணி சிவத்தின் ஜீவிய சரித்ரம், முகவுரை,

(1) சுகமே லக்ஷியம், (2) ஜீவ விளக்கம், (3) முமுட்சுத்துவ கஷ்டங்கள், (4) குருபக்தியின் விசேஷம், (5) சற்குரு தர்சனம், (6) நம்பிக்கையே பிரதானம், (7) வேறு நம்பிக்கையும் வீண்போகாது, (8) உத்தம உபதேசம், (9) வவர்த்த வாத வெற்றி, (10) உடைமையை ஒழி, (11) சரீரம் ஒரு மல மூட்டை, (12) மாய விளக்கம், (13) மன நிரோதமே வேண்டும், (14) குருவே நாதர், (15) சரீரதிடம் அவசியம், (16) மஹான்கள் இருவகை, (17) ஜாதிக்கும் மோக்ஷத்திற்கும் சம்பந்தமேயில்லை, (18) வாசனாசக்தி, (19) ஜாதி தர்ம ரகசியம், (20) உயர்வு தாழ்வு இல்லை, (21) அரியதொரு உண்மை, (22) ஆனந்த சொரூபமே ஆத்மா, (23) புறத்துறவு அவசியமாயினும் போதாது, (24) சித்திகள் அற்பமாம், (25) க்ஷேத்திரங்கள் அவசியமாம், (26) பக்தியும் ஞானமும் ஒன்றே, (27) இராஜயோக சித்தி, (28) பரிபக்குவ பரீட்க்ஷை, (29) இராஜயோக அநுபவம், (30) வித்தையும் அவித்தையும் ஒன்றே, (31) இன்னமையாம் கர்ம சக்தி, (32) பலனைக் கருதாதே, (33)

வெறும் படிப்பு வீணே, (34) மாயையின் மயக்கம், (35 ஜீவ காருண்யம், (36) சுற்றுதல் நிற்க, (37) ஜீவதந்திர மகிமை, (38) ஆச்சிரம பேதங்கள், (39) சந்நியாசத்தின் மகிமை.

இதன் முதற்பதிப்பு ஆறுமாதத்தில் செலவழிந்து விட்டது. இரண்டாம் பதிப்பும் செலவாய் விட்டது. இதைவிட வேறு அத்தாக்ஷி என்ன? மூன்றும் பதிப்புப் புஸ்தகங்கள் அநேகமாகச் செலவாய் வருகின்றன. மிகு சொற்ப காப்பிகளேகைவச மிருக்கின்றன.

ஸ்ரீ ஜத்சிவத்தின படத்துடன் இதன் விலை	ரூபா	1 2 0
திருமுருகாற்றுப்படை மூலம் (சுத்தப்பதிப்பு)	அணா	1
கந்தர் சஷ்டி கவசம் மூலம் (சுத்தப் பதிப்பு)	அணா	1.

ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தர்

ஞாந இரத்நாவளி

இதில் (1) நமது பூமியே புண்ணிய பூமி, (2) * எனது குருநாதர், * (3) வேதாந்த தத்துவம், (4) * கிழக்கும் மேற்கும், (5) * கடிதங்கள் 1-ம்பாகம், (6) கடிதங்கள் 2-ம் பாகம், (7) * எதிரொலிகள், இவ்வேழும் உயர்ந்த பயிண்டு செய்யப்பட்டிருக்கிறது, ஸ்வாமிகள் படத்துடன் இரண்டு பாகங்கள் தனித்தனி

* இக்குறிப்பிட்டுள்ள புத்தகங்கள் தனித்தனி விலை அணா 8.

இதன் விலை ரூபா 1 8 0